[1992 மார்ச் 19

4. அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, (பேரவைத் துணைத் தலைவர்)—தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' தமிழ்நாடு சட்டப்பேரவையின் 1991–92 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்— (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை.

(இ) கோரிக்கை எண் 16 — தீயணைப்புப் பணிகள் தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் —தொடர்ச்சி. காவல் துறை, தீயணைப்புப் பணிகள் மற்றும் மாநில ஆயத் தீர்வைத் துறை மானியக் கோரிக்கைகள்மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சாதுர்யமும் தொலைநோக்குப் பார்வையும் படைத்த தமிழக மக்கள் தமிழகத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில் நடந்த அநியாயங்கள், அக்கிரமங்கள், அலங்கோலங்கள், அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் அதிருப்தி அடைந்த தங்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிற, மக்கள் பணி செய்கிற ஒரு நல்ல நிலையான, முறையான ஆட்சி தமிழகத்திற்குவர வேண்டுமென்று எண்ணினார்கள். அந்த எண்ணத்திற்கு செயல் வடிவம் தந்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எங்களைப் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்து மகத்தான தேர்தல் வெற்றியை வழங்கி இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். நல்லது நடக்கும், பாதுகாப்பு கிடைக்கும் என்று கருதிய மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளையும் ஏக்கங்களையும் நிறைவேற்றுகிற வகையில் நாங்கள் உழைத்துவருகிறோம். இனியும் மக்களுக்கு உழைத்திட தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).